2024
சனவரி

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்
## தயாரிப்பு மற்றும் பணிகள்

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2024 சனவரியில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலை எடுத்துக்காட்டின**

**தயாரித்தலுக்கான இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), 2024 சனவரியில் 55.6 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து, தயாரித்தல் நடவடிக்கைகளில் விரிவடைதலினை எடுத்துக்காட்டியது.** இம்மேம்படுதலுக்கு அனைத்து துணைச் சுட்டெண்களிலும் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் காரணமாக அமைந்தன.

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பவற்றில் விரிவடைதலானது புடவைகள் மற்றும் அணியும் ஆடை துறையின் தயாரிப்பினால் பாரியளவில் தூண்டப்பட்டிருந்தது. எனினும், திசெம்பர் பண்டிகைப் பருவகால இறுதியுடன் கேள்வியில் வீழ்ச்சி காரணமாக உணவு மற்றும் குடியானங்கள் துறைத் தயாரிப்பில் புதிய கட்டளைகளும் உற்பத்தியும் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பன புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பனவற்றுக்கிசைவாக மாதகாலப்பகுதியில் விரிவடைந்தன. மேலும், செங்கடல் கப்பற் போக்குவரத்து இடையூறுகளின் பிரதான காரணமாக நிரம்பலர் விநியோக நேரம் சனவரியில் உயர்வான வீதத்தில் நீட்சியடைந்தது.

***கொமுசு பெறுபேறுகள் - தயாரிப்பு அளவீடு***


| மாறி | திசெ. 2023 | சன. 2024 | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | **52.7** | **55.6** | **+** | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| கொ.மு.சு. துணைச் சுட்டெண்கள் | | | | |
| புதிய கட்டளைகள் | 56.0 | 55.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 53.0 | 54.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 42.5 | 55.1 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 59.5 | 55.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 54.5 | 58.2 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பிரதானமாக மேம்பட்ட பேரண்டப் பொருளாதார சூழல் காரணமாக அடுத்த மூன்று மாதங்களுக்கான தயாரித்தல் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் சாதகமாகக் காணப்படுகின்றன.

தயாரிப்பு
கொ.மு.சு **55.6**
2024 சனவரி

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### உலகளாவிய தோற்றப்பாடு:

கொமுசு தயாரிப்புத் தொகுப்பு

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | சீர்குலைவிலிருந்து நடுநிலை |
| இந்தியா | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |
| சீனா | மேம்பட்டுள்ளது, அதே வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | சீர்குலைவிலிருந்து மேம்பட்டுள்ளது. |
| ஐக்கிய இராச்சியம் | சீர்குலைந்துள்ளது, மெதுவான வீதத்தில் |
| யூரோ வலயம் | சீர்குலைந்துள்ளது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2024 பெப்புருவரி 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1]எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கை கொ.மு.சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), 60.1 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்த வியாபார நடவடிக்கைச் சுட்டெண்[2] மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு 2024 சனவரியில் பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலை எடுத்துக்காட்டியது.**


தொழில் நடவடிக்கைகளில் தொடர்ச்சியான விரிவடைதலானது ஏனைய தனிப்பட்ட பணி நடவடிக்கைகள் மற்றும் தொடர்ச்சியாக இரண்டாவது மாதமாகவும் சுற்றுலாப்பயணி வருகைகள் 200,000 இனை விஞ்சியமைக்கு மத்தியில் தங்குமிடம், உணவு அத்துடன் குடிபானம் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க மேம்பாடுகள் என்பவற்றினால் தூண்டப்பட்டிருந்தது. அதேவேளை, சந்தை வட்டி வீதங்களில் குறைப்புகளுக்கிசைவாக நிதியியல் பணிகளும் மேலும் மேம்பட்டன. எவ்வாறிருப்பினும், பெறுமதிசேர் வரிக்கான திருத்தங்கள், பண்டிகைப் பருவகாலம் முடிவடைதல் என்பன மாதகாலப்பகுதியில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத் துணைத் துறையினை வெகுவாகப் பாதித்தன.

புதிய வியாபாரங்கள் குறிப்பாக நிதியியல் பணிகள், ஏனைய தனிப்பட்ட பணி நடவடிக்கைகள் மற்றும் தொழில்சார் பணிகள் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் மூலம் சனவரியில் அதிகரித்தன.

பல கம்பனிகளாலும் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆட்சேர்ப்புக்களுக்கு மத்தியில் தொழில்நிலை வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, நிலுவையிலுள்ள பணிகள் சனவரி காலப்பகுதியில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன.

## பணிகள்
# கொ.மு.சு 60.1
2024 சனவரி

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***கொமுசு பெறுபேறுகள் - பணிகள் அளவீடு***

| மாறி | திசெ. 2023 | சன. 2024 | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **71.0** | **60.1** | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| புதிய வியாபாரங்கள் | 64.5 | 54.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 46.5 | 48.5 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 48.3 | 46.7 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 64.1 | 69.8 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் சனவரியில் தொடர்ந்தும் அதிகரித்தன. எனினும், பெறுமதிசேர் வரித் திருத்தங்கள் காரணமாக நுகர்வோரின் கொள்வனவு சக்தியில் வீழ்ச்சி மற்றும் உள்ளீட்டுச் செலவுகளில் அதிகரிப்பு என்பவற்றுக்கிசைவாக விற்பனைகளில் வீழ்ச்சி தொடர்பில் கரிசனைகள் காணப்படுகின்றன.

**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |
| இந்தியா | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |
| சீனா | மேம்பட்டுள்ளது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |
| யூரோ வலயம் | சீர்குலைந்துள்ளது, உயர்வான வீதத்தில் |

*மூலம்: எஸ் அண்ட் பி குளோபல்[1], 2024 பெப்புருவரி 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[2] பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளைப் பின்பற்றி 2024 சனவரி தொடக்கம் ''பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்'', ''கொமுசு பணிகள்'' ஆகவிருக்கும் விதத்தில் கருத்திற்கொள்ளப்படுகின்றது.

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அண்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.

பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பிடப் செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.